# புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
வெளியீட்டு உதவித் திட்டம்

2025- 2026

நூல் அபிவிருத்தி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை

இல 14. சுதந்திர வழி,

கொழும்பு 07

2026 ஆம் ஆண்டுக்கான கையெழுத்துப் பிரதிகள் 2025 செப்டம்பர் 20 முதல் 2025 டிசம்பர் 20 ஆம் திகதி வரை (அரசு விடுமுறை நாட்கள் தவிர) காலை 9.00 முதல் மாலை 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் - விண்ணப்பப்படிவத்தை 250.00 ரூபாய் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.


| | | |
|---|---|---|
| கடிதங்களும் விசாரணைகளும | : | பணிப்பாளர் நாயகம் |
| | | தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை |
| | | இல. 14, சுதந்திர வழி, |
| | | கொழும்பு 07 |
| தொலைபேசி இலக்கம் | : | 011 2687583 |
| மின்னஞ்சல் | : | isbnsrilanka@mail.natlib.lk |

# தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைச் சபை

# வெளியீட்டு உதவித் திட்டம் - 2025/ 2026

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை மூலம் இளம் எழுத்தாளர்களினதும் தேர்ச்சிபெற்ற எழுத்தாளர்களினதும் எழுத்தாக்க முன்னேற்றத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் நெறிப்படுத்தப்படும் வெளியீட்டு உதவித்திட்டமானது, 1984 ஹஆம் ஆண்டில் இருந்து செயற்படுத்தப்படும் ஓர் தேசிய செயற்திட்டமாகும்.

## 01. குறிக்கோள்கள்

i. உயர் தரமான உள்நாட்டு புத்தகங்களை உருவாக்குதல்.
ii. புத்தக வாசிப்பை மேம்படுத்தல்.
iii. நூலாசிரியர்களையும் மொழி பெயர்பாளர்களையும் ஊக்குவித்தல்.
iv. வெளியீடுகளின் உற்பத்தி நியமங்களையும் பண்புரீதியான தன்மையையும் உயர்மட்டத்திற்கு மேம்படுத்துதல்.
v. வெளியீடுகளின் விலையை நியாயமான மட்டத்தில் வைத்திருத்தல்.
vi. தேசிய நூலக சேவையை விருத்தி செய்தல்.

## 02. சமர்ப்பிக்கக்கூடிய கையெழுத்துப் பிரதிகள்

பின்வரும் துறைகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் கையெழுத்துப் பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு உண்டு.

i. கல்வியியல் / ஆய்வு நூல்கள்
ii. படைப்பிலக்கிய நூல்கள் (நாவல்கள் / சிறுகதைகள் / கவிதைகள்)
iii. சிறுவர் இலக்கியம்
iv. குழந்தைகள் படைப்புகள்
v. பல்வேறு துறைசார்ந்த படைப்புகள்

## 03. சமர்ப்பிக்க முடியாத கையெழுத்துப் பிரதிகள்

பின்வரும் வகைகளைச் சார்ந்த கையெழுத்துப் பிரதிகளை இச் செயற்திட்டத்திற்கு சமர்ப்பிக்க முடியாது.

i. இதற்கு முன்னர் அச்சிட்டு வெளியிட்ட நூல்கள்
ii. பரீட்சைக் கலைத்திட்டத்திற்கமைய எழுதப்பட்ட துணை நூல்கள் அல்லது பரீட்சைகளை இலக்கு வைத்து வினாவிடை வடிவத்தில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.
iii. யுனெஸ்கோ அளவுகோல்களுக்கமைய, அச்சிட்ட பின்னர் 49 பக்கங்களுக்கு குறைந்த கையெழுத்துப் பிரதிகள்( 16 பக்கங்களுக்கு குறைந்த சிறுவர் படைப்புகள்)
iv. போதியளவு வரிகளற்ற ஓவியங்கள், வடிவமைப்புக்கள் மற்றும் புகைப்படங்களை உள்ளடக்கிய வெளியீடுகள்.
v. சித்திரக் கதைப் புத்தங்கள்.

vi. புத்தக வடிவில் சீரமைக்கப்படாத பட்டப்படிப்புக்கான ஆராய்ச்சிக் கட்டுரைகள்
vii. வேறு உதவித் திட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.
viii. இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.
ix. தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் வெளியீட்டு உதவித் திட்டங்களின் கீழ் இதற்கு முன் 03 தடவைகள் அச்சிடும் உதவியைப் பெற்ற எழுத்தாளர்களால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்.

## 04.உதவி நடைமுறை

கையெழுத்துப் பிரதிகளின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குவதன் மூலமும், உயர் அச்சிடுதல்மூலமும் வெளியீட்டுத் தரங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும், அவை அச்சிடப்பட்ட பிறகு, அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளின் பல பிரதிகளை வாங்குவதன் மூலமும் இத்திட்டத்தின் கீழ், தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எழுத்தாளருக்கு ஆதரவளிக்கிறது. இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளைக் கொண்டாடவும், தரமான படைப்புகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கவும் 25 தலைசிறந்த படைப்புகளுக்கு (**சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்**) நிதியுதவி அளிக்க உத்தேசிக்கப்படுகிறது.

- **கையெழுத்துப் பிரதிகளை சமர்ப்பிக்கக்கூடிய பகுதிகள் மற்றும் முன்மொழியப்பட்ட மானியத் தொகை**

| விடயப் பகுதி | ஒரு எழுத்தாளருக்கு வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள உதவித்தொகை (ரூ.) | உதவித்தொகை வழங்கப்படவுள்ள கையெழுத்து பிரதிகளின் எண்ணிக்கை **(சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்)** |
|---|---|---|
| 1.கல்வியியல் / ஆய்வு நூல்கள் | 150,000.00 | 03 |
| 2i. நாவல்<br>ii. சிறுகதை<br>iii. கவிதை | 125,000.00<br>100,000.00<br>75,000.00 | 03<br>03<br>03 |
| 3.சிறுவர் இலக்கியம் | 75,000.00 | 03 |
| 4. குழந்தைகள் படைப்புகள் | 75,000.00 | 05 |
| 5.பல்வேறு துறைசார்ந்த படைப்புகள் | 100,000.00 | 03 |
| சேகரிப்புக்கள் | | 25 |

இவ் வகைகளின் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற மொழிபெயர்ப்பு கையெழுத்துப் பிரதிகளுக்கும் அந்தந்த மானியத் தொகை செல்லுபடியாகும். மொழிபெயர்க்கப்பட்ட கையெழுத்துப் பிரதியுடன் அசல் படைப்பின் நகலை சமர்ப்பிக்க வேண்டும்.

உதவித்தொகை அங்கீகரிக்கப்பட்ட படைப்பின் குறைந்தபட்சம் 1000 பிரதிகள் வெளியிடப்பட வேண்டும். முடிந்தவரை அதிகமான பிரதிகளை அச்சிட்டு விநியோகிப்பதன் மூலம் உள்ளூர் வாசகர்களுக்கும் நூலகங்களுக்கும் உதவ முடிவதுடன், ஒரு பிரதியின்

விலை நியாயமானதாக இருக்க வேண்டும் என தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எதிர்பார்க்கின்றது.

இதன்படி, சபையின் அச்சு ஆலோசனைக் குழுவால் தீர்மானிக்கப்பட்ட தொகையில் அச்சிடப்பட்ட பிரதிகளை உரிய எண்ணிக்கையில் வாங்குவதன் மூலம் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை எழுத்தாளருக்கு ஆதரவளிக்கும்.

## 05. கையெழுத்து பிரதிகளை தயாரித்தல்.

i. குறிப்பிட்ட கையெழுத்துப் பிரதியின் உள்ளடக்கத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு மதம், இனம், சமூகம், நிறுவனம் அல்லது தனிப்பட்ட பெயரை இழிவுபடுத்தும் எந்தவொரு விடயங்களையோ உள்ளடக்கியிருத்தல் கூடாது.

ii. கையெழுத்துப் பிரதி கடதாசியின் தனிப்பக்கத்தில் அல்லது இரண்டு பக்கங்களில் தெளிவாகவும். தவறற்றும் கணினி எழுத்துக்களால் தயாரித்து அல்லது தட்டச்சு செய்தல் வேண்டும்.

iii. மதிப்பீட்டாளர் தனது அவதானிப்புகளை இலகுவில் குறிப்பிடக்கூடிய வகையில் கடதாசியின் இடது பக்கத்திலும் வரிசைகளுக்கிடையிலும் போதியளவு இடம் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. அச்சடிக்கப்படுகின்ற பிரதியில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்க்கப்படும் ஓவியங்கள், நிழற்படங்கள், புள்ளிவிபரங்கள், நூல்பட்டியல், சுட்டிகள், பொருளடக்கம் முதலியவற்றை கையெழுத்துப் பிரதியுடன் சமர்ப்பிக்க வேண்டும். அறிமுகம், முன்னுரை, பின்னுரை, சமர்ப்பணம் மற்றும் அட்டை உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

v. கையெழுத்துப் பிரதி சீராகவும் நேர்த்தியாகவும் கட்டப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

vi. கையெழுத்துப் பிரதியில் நூலாசிரியரின் பெயரையோ அவரை அடையாளப்படுத்தக்கூடிய வேறு சின்னத்தையோ உள்ளடக்கப்படல் கூடாது. அதேசமயம் பக்கங்களை சரியான முறையில் இலக்கமிட்டிருத்தல் வேண்டும்.

vii. கையெழுத்துப் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் அதன் மொழியை சிறப்பாகத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். மொழித் தவறுகள் உள்ள கையெழுத்துப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.

மேற்கூறிய வகையில் முறையே தயாரிக்கப்படாமல் சமர்ப்பிக்கப்படும் கையெழுத்துப்பிரதிகள் மதிப்பீடு செய்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

## 06. விண்ணப்பங்களையும் கையெழுத்துப் பிரதிகளையும் சமர்ப்பித்தல்

i. கல்வியியல் அல்லது இலக்கியப் பெறுமதிக் கொண்ட கையெழுத்துப் பிரதிகளுக்கு மாத்திரம் இத்திட்டத்தின்கீழ் உதவி வழங்கப்படும். இதன்போது உசிதமான தன்மையை / உசிதமற்ற தன்மையை கவனத்தில் கொண்டு ஏற்புடைய விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் நிரப்பி, நூலின் இரண்டு பிரதிகளை மதிப்பாய்வுக் கட்டணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (விண்ணப்பப்படிவ கட்டணம் ரூபா 250.00)

ii. மொழிபெயர்ப்பு நூல் ஒன்றினை வெளியிடும்போது ஏற்படும் சட்டரீதியான பிரச்சினைகள் இருப்பின். அவற்றைத் தீர்ப்பது நூலாசிரியரின் / மொழிபெயர்ப்பாளரின் / வெளியீட்டாளரின் பொறுப்பாகும்.

iii. குழந்தைகளின் படைப்புகளை சமர்ப்பிக்கும் போது,ஒரு பிரதி 04 வண்ணங்களில் (04 ஊழடழரசள) இருத்தல் வேண்டும். குறைந்தது 05 வரைபடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். சிறுவர் படைப்புகளின் இரண்டு கையெழுத்துப் பிரதிகள் தவிர, ஒரு மென் பிரதியும் (ளுழகவஉழில) pub@mail.natlib.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

iv. ஓர் எழுத்தாளர், ஒரு வருடத்தில் ஒருமுறை மாத்திரமே கையெழுத்துப் பிரதியை சமர்ப்பிக்க முடியும்.

## 07. ஆரம்ப ஆய்வு

ஏற்புடைய கையெழுத்துப் பிரதி பற்றிய ஆரம்ப ஆய்வு சபையின் வெளியீட்டு ஆலோசனைக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும். இதன்போது கருத்திட்டத்தில் சேர்ப்பதற்கு அடிப்படை அங்கீகாரம் பெற்ற கையெழுத்துப் பிரதிகள் மாத்திரமே மதிப்பாய்விற்காக ஏற்றுக்கொள்ளப்படும். வெளியீட்டு ஆலோசனைக் குழுவினால் ஆரம்ப ஆய்வின்போது நிராகரிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகள் ஏற்புடைய மதிப்பீட்டுக் கட்டணத்துடன் எழுத்தாளரிடம் மீண்டும் அனுப்பிவைக்கப்படும்.

## 08. மதிப்பாய்வுக் கட்டணம்

i. கல்வியியல் ∴ ஆய்வு கையெழுத்துப் பிரதி ஒன்றை மதிப்பாய்வு செய்தல்

| | |
|---|---|
| பக்கங்கள் 1 -150 வரை (யு-4) | ரூபா 2,000.00 |
| 150 பக்கங்களுக்கு மேற்படும் ஒவ்வொரு பக்கத்திற்கும் | ரூபா 10.00 |

ii. நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் இலக்கிய கையெழுத்துப் பிரதி ஒன்றை மதிப்பாய்வு செய்தல்

| | |
|---|---|
| பக்கங்கள் 1 -150 வரை (யு-4) | ரூபா 1,200.00 |
| 150 பக்கங்களுக்கு மேற்படும் ஒவ்வொரு பக்கத்திற்கும் | ரூபா 7.00 |

iii. குழந்தை இலக்கிய கையெழுத்துப் பிரதிக்கான மதிப்பாய்வு

| | |
|---|---|
| பக்கங்கள் 1 -150 வரை (யு-4) | ரூபா 1,000.00 |

கையெழுத்துப் பிரதிகள் சாதாரணமாக இரண்டு மதிப்பாய்வாளர்களிடம் அல்லது விசேட சந்தர்ப்பங்களில் மூன்று மதிப்பாய்வாளர்களிடம் சமர்ப்பிக்கப்படும். மதிப்பாய்வுக் கட்டணத்தில் ஒரு பகுதி மாத்திரமே இக்கட்டணங்களில் உள்ளடக்கப்படுகிறது. எஞ்சிய பகுதி கட்டணம் சபையினால் செலுத்தப்படும்.

மதிப்பாய்வுக் கட்டணத்திற்கான காசோலைகள் **தலைவர், தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபை** என்ற பெயரில் எழுதப்பட வேண்டும். கட்டணமாக செலுத்துவதாயின், அலுவலக நேரங்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை, சபையின் கசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாவிடின், இலங்கையின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **மக்கள் வங்கி, கொழும்பு நகரமண்டப கிளை இலக்கம் 167-1-001-6-3170315 என்ற தேசிய நூலக ஆவணமாக்கல்**

**சேவைகள் சபையின் கணக்கில்** வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட வைப்புச் சீட்டின் பிரதியை கையெழுத்துப் பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 09. இரகசியத் தன்மை

கையெழுத்துப்பிரதியின் மதிப்பாய்வின்போது மதிப்பாய்வாளருக்கு நூலசிரியர் பற்றியோ நூலாசிரியருக்கு மதிப்பாய்வாளர் பற்றியோ எதுவித தகவல்களும் வெளியிடப்பட மாட்டாது. இந்த இரகசியத்தன்மைக்கு தடைவிதித்தல் அல்லது தடைசெய்வதற்கு எத்தனித்தல் கையெழுத்துப் பிரதியை நிராகரிப்பதற்கு காரணமாக அமையும்.

## 10. மதிப்பாய்வு

மதிப்பாய்விற்கு தகுதிபெற்ற அனைத்து கையெழுத்துப் பிரதிகளும் சாதாரணமாக இரண்டு மதிப்பாய்வாளர்களிடம் அனுப்பிவைக்கப்படும். இந்த மதிப்பாய்வுக்குழு ஏற்புடைய விடயம் தொடர்பான விசேட நிபுணத்துவம் பெற்றவர்களினால் அமைக்கப்பட்டதாகும். மதிப்பாய்வாளரினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள், வெளியீட்டு ஆலோசனைக்குழுவினால் ஆய்வு செய்தபின்னர், குறித்துரைக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியை ஏற்றுக்கொள்வது அல்லது புறக்கணித்தல் பற்றி தீரமானிக்கப்படும். திருத்திய பின்னர் மீண்டும் மதிப்பாய்வு செய்ய வேண்டுமென குழு தீர்மானிக்கும் கையெழுத்துப் பிரதிகளின் தரத்தை உயர்த்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் மதிப்பாய்வு அறிக்கையில் மேற்படி பகுதிகளை மேற்கோள்கள் காட்டி நூலாசிரியருக்கு அறிவிக்கப்படும் மதிப்பாய்வு அறிக்கைகளின் பூரண உரிமை சபைக்கு உரித்தாகும். எந்தவொரு காரணத்தின்நிமித்தமும், அவை நூலாசிரியருக்கு வெளியிடப்பட மாட்டாது.

## 11. நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள்

நிதி உதவி பெறுவதற்கு கையெழுத்துப் பிரதிகளை அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்காமை பற்றி வெளியீட்டு ஆலோசனைக் குழுவின் தீர்மானம் இறுதியானதாகும். நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் நூலாசிரியருக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும். மேற்படி கையெழுத்துப் பிரதிகளுக்கான

மதிப்பாய்விற்கென சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக மதிப்பாய்வுக் கட்டணம் நூலாசிரியரிடமிருந்து அறவிடப்படமாட்டாது.

## 12. நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளுக்கான மேன்முறையீடுகள்

நிராகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் பற்றி நூலாசிரியர் ஓர் மேன்முறையீட்டை முன்வைக்க முடியும். மேற்படி மேன்முறையீட்டை வெளியீட்டு ஆலோசனைக்குழு ஏற்றுக்கொண்டால் அதற்கு 1000 ரூபாய் மேன்முறையீட்டு வைப்புப்பணமாக சமர்ப்பிக்க வேண்டும். ஆலோசனைக்குழு மேற்படி மேன்முறையீட்டைக் கவனத்திற்கொண்டு அது நியாயமானதென தோன்றினால், மேற்படி மதிப்பாய்வு அறிக்கைகள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் என்பன மீண்டும் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கு மேன்முறையீட்டு உபகுழுவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

## 13. அச்சிடும்போது பூர்த்தி செய்யவேண்டிய தேவைகள்

நூல் வெளியீட்டு உதவித் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை அச்சிடும்போது பின்பற்ற வேண்டிய தர நியமங்கள் ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி தரநியமங்களை பின்பற்றுவது நூலாசிரியரின் பொறுப்பாகும்.

i. குழந்தைகளின் படைப்புகளைத் தவிர, ஏனைய படைப்புகள் குறைந்தபட்சம் ஜி.எஸ்.எம்.70 இல.01 (70 புளுஆ இல. 01) காகிதத்தில் அச்சிடப்பட வேண்டும். குழந்தைகள் படைப்புகளுக்கு ஜி.எஸ்.எம் 80 அல்லது அதற்கு மேற்பட்ட காகிதத்தைப் பயன்படுத்தவும்.

ii. படைப்பிலக்கிய நூல்கள் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களுக்கு 11 அல்லது 12 புள்ளி எழுத்துரு பயன்படுத்தப்பட வேண்டும், தேவைப்பட்டால் 10 புள்ளி எழுத்துருவை ஆய்வு ரீதியான கல்வியியல் நூல்களுக்குப் பயன்படுத்தலாம். குழந்தைகளின் படைப்புகள் குறைந்தது 16 புள்ளி எழுத்துருவைப் பயன்படுத்த வேண்டும்.

iii. அச்சிடப்பட்ட புத்தகம் பிரிவு பிணைப்பு (Section binding) அல்லது சரியான பிணைப்பு (perfect binding) முறையால் பிணைக்கப்படல் வேண்டும். 250 பக்கங்களுக்கு மேல் உள்ள புத்தகங்கள் கட்டாயமாக ளுநஉவழைெ டிைனெைபெ முறையில் கட்டப்படல் வேண்டும். குழந்தைகளின் படைப்புகளுக்கு நூல் அல்லது கம்பி மூலம் கட்டுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

iv. நூற் தலைப்புப் பக்கத்தை உருவாக்கல் மற்றும் நூல் வடிவமைப்பு பற்றி தர நிர்ணய நூற்பட்டியல் முறைகள்/ நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் வெளியிடப்பட்ட நூல் தயாரிப்பு முறை / சிறுவர் நூல் தயாரிப்பு முறை என்ற தலைப்பில் புத்தகங்கள் தேசிய நூலக நூல் விற்பனைக்கூடத்தில் கொள்வனவு செய்ய முடியும் அல்லது தேசிய நூலகத்தின் வாசகர் சேவைகள் பிரிவில் இருந்து உசாத்துணையாக பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

v. வெளிப்புற அட்டை குறைந்தது 230 GSM Art board பயன்படுத்தப்படல் வேண்டும். அட்டைப்படம் 4 வண்ணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். குழந்தைகளின் படைப்புகளின், உள்ளே வரைபடங்கள் நான்கு வண்ணங்களாக இருத்தல் வேண்டும்.

vi. அச்சுப் பிழைகள் இல்லாமல் நூல் அமைதல் வேண்டும்.

vii. அச்சிடுவதற்கு முன்னர் நூலின் அட்டைப்படமும் முதற் பக்கங்களும் நூலக சபையில் காட்டி அங்கீகாரம் பெற வேண்டும்.

viii. நூல் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட அச்சகத்தில் அச்சிடப்பட்டு, மேற்படி அச்சகத்தின் பதிவிலக்கத்தோடு ஏற்புடைய நூலில் ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டமையை அச்சக நிறுவனம் எழுத்துமூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

## 14. ஒப்பந்தமும் பிரகடனமும்

i. இத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை பிரசுரிப்பதற்கு முன்னர் நூலாசரியர் நூலகச் சபையுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

ii. மேற்படி ஒப்பந்தத்தின் மூலம் நூலகச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதி உத்தேச நிபந்தனைகளுக்கமைய அச்சிட்டு குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஏற்புடைய அச்சிடப்பட்ட பிரதிகள் நூலகச் சபையில் கொண்டுவந்து ஒப்படைப்பதாக நூலாசிரியர் ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

iii. ஏற்புடைய நிபந்தனைகளுக்கமைய அச்சிடப்பட்ட புத்தகங்களின் அவசியமான பிரதிகள் அச்சிடும் குழுவினால் தீர்மானிக்கப்படும் விலைக்கு, பெற்றுக்கொள்வதாக இதன்போது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை உடன்படுகிறது.

iv. அங்கீரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் வெளியிடப்படும்போது நூலகச் சபையின் எழுத்துமூல அனுமதியின்றி ஏற்புடைய கையெழுத்துப் பிரதிக்கு எதுவித பகுதியைச் சேர்க்கவோ அல்லது கையெழுத்துப் பிரதியின் எந்தவொரு பகுதியையும் நீக்கவோ முடியாது.

v. ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் எவ்வகையிலேனும் மீறுதல் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு காரணமாக அமையலாம்.

vi. அச்சுப் பணிகள் நிறைவடைந்த பின்னர் இரண்டு மாதிரி அச்சுப் பிரதிகளை நூலகச் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதேசமயம் இதன்போது ஏற்புடைய நிபந்தனைகளுக்கமைய நூல் அச்சிடப்பட்டுள்ளதாவென பரிசீலனை செய்யப்படும். மேற்படி எடுத்துக் காட்டாகத் திகழும் அச்சுப் பிரதி அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நூலகச் சபைக்கு வழங்கப்படுகின்ற அனைத்து அச்சுப் பிரதிகளும் நூலகச் சபைக்கு முன்கூட்டியே சமர்ப்பிக்கப்பட்ட மாதிரி கையெழுத்துப் பிரதிக்கு சகல வழிகளிலும் உடன்பாடானதாக அமைய வேண்டும்.

vii. வெளியீட்டு உதவித் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட படைப்புகளின் பிரதியை அதன் மென் பிரதியுடன் (Softcopy) சபைக்கு வழங்க வேண்டும். இது தேசிய டிஜிட்டல் நூலகத்தில் வாசகர் உசாத்துணைக்காக மட்டுமே சேர்க்கப்படும்.

**கவனிக்கவும்**

மேற்கூறிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத படைப்புகளை, குறிப்பாக அச்சுக்கலை குறைபாடுகளைக் கொண்ட நூல்கள், வெளியீட்டு ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் பேரில் நிராகரிப்பதற்கான முழு அதிகாரமும் நூலகச் சபைக்கு உரித்தானதாகும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை**
**இல. 14, சுதந்திர வழி,**
**கொழும்பு 07**
**விசாரணைகள்: 011-2687583**